## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்

## புதிய அனுமதிகள்

## தமிழில் முதுமாணி (Master of Tamil) 2022/23 (அணி VIII)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்**

"அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது உயர்கல்வி நிறுவனத்தில் பட்டம் பெற்றவர்களாகவோ அல்லது பொருத்தமான வேறு தகைமைகள் உடையவர்களாகவோ இருத்தல் வேண்டும்.

**தெரிவுமுறைமை:-**

- நேர்முகத் தேர்வு

**கற்கைக் காலம்**: ஒரு வருடம்

**மொழி மூலம்** : தமிழ்

**கற்கைநெறிக் கட்டணம்** : 135,000/- ***(5000/- மீள அளிக்கப்படும்)***

**விண்ணப்பப் படிவக் கட்டணம்**: 1,000/-

**விண்ணப்ப முடிவுத்திகதி** : 28.02.2022

### விண்ணப்பப் படிவம் பெறும் முறை:

1. மக்கள்வங்கியின் ஏதாவதொரு கிளையில் பணம் வைப்பிலிடும் வைப்புச்சீட்டில் **(190082560002170)** எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற்கான ரூபா 1000/- கட்டணத்தை செலுத்திய பின் வைப்புச்சீட்டை உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
2. தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பபடிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட 23 x 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர், உயர் பட்டப் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
3. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிகவிபரங்கள் **www.grad.jfn.ac.lk** எனும் பல்கலைக்கழக வலைத்தள வசதியூடாகவும் *(website)* பெற்றுக்கொள்ளலாம். வலைத்தளம் மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா1000/- பெறுமதியான காசுக்கட்டளையை மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு **(190082560002170)** செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

### விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்தல்

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு** பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் **28.02.2022** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர்,உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
25.01.2022.